## ஊரக மின்மயமாக்கல் – தீனதயாள் உபாத்யாய கிராம ஜோதி யோஜனா
## ( முந்தைய இராஜீவ்காந்தி கிராமப்புற மின்மயமாக்கல் திட்டம் )

இராஜீவ்காந்தி கிராமப்புற மின்மயமாக்கல் திட்டம் (RGGVY) மத்திய அரசால் கிராமப்புறங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கத் தேவையான மின்கட்டுமானத்தை அமைக்கும் நோக்கத்துடன் 2005–ல் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதியுதவியை இந்திய அரசாங்கம் ஊரக மின்மயமாக்கல் கழகத்தின் மூலமாக வழங்குகின்றது. இந்த நிதியுதவி, 90 சதவீதம் மானியத் தொகையாகவும், 10 சதவீதம் கடன் தொகையாகவும் வழங்கப்படுகிறது. மேலும், வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள வீடுகளுக்கு மின்னிணைப்பு கொடுப்பதற்கான செலவுத் தொகை 100 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் முதல் கட்டமாக 26 மாவட்டங்களில் இத்திட்ட பணிகள் டிசம்பர் 2010–இல் முடிக்கப்பட்டு விட்டன.

முதல் கட்டத்தில், 26 மாவட்டங்களில் 10,129 எண்ணிக்கை 25/16 கேவிஏ மின்மாற்றிகளும் 13,296 கி.மீ. உயர் மற்றும் தாழ்வழுத்தக் கம்பிகளும் நிறுவப்பட்டு 5,01,202 எண்ணிக்கை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் வீடுகளுக்கும் மின்னிணைப்பு வழங்கப்பட்டன. ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த தொகையான ரூ.341.21 கோடி ஊரக மின்மயமாக்கல் கழகத்தினால் வழங்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக எஞ்சியுள்ள 3 மாவட்டங்களான தருமபுரி, நீலகிரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ரூ.37.27 கோடிக்கு, இத்திட்டத்தை செயல் படுத்துவதற்கு ஊரக மின்மயமாக்கல் கழகம் ஒப்புதல் வழங்கியது.

இத்திட்டத்தை நீலகிரி, திருநெல்வேலி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஆகிய 3 மாவட்டங்களில் ஒட்டு மொத்த ஒப்பந்த அடிப்படையில் செயல் படுத்துவதற்கான ஒப்பந்த ஆணைகள் ஸ்ரீகணேஷ் ஈபிசி பிரைவேட் லிமிடெட், ஆரல்வாய்மொழிக்கு வழங்கப்பட்டது.

ஒப்பந்ததாரரின் பணித்திறன் தொய்வாக இருந்த காரணத்தால் ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்பட்டு வாரிய அளவில் மீதமுள்ள பணிகள் நடைபெற்று முடிவடைந்தன.

மூன்று மாவட்டங்களிலும் இத்திட்டக் களபணிகள் 31.12.2017அன்றுடன் முடிவடைந்தன. இரண்டாம் கட்டத்தில், 3 மாவட்டங்களில் 546 எண்ணிக்கை 25/16 கேவிஏ மின்மாற்றிகளும் 792.91 கி.மீ. உயர் மற்றும் தாழ்வழுத்தக் கம்பிகளும் நிறுவப்பட்டு 24,369 எண்ணிக்கை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் வீடுகளுக்கும் மின்னிணைப்பு வழங்கப்பட்டன.

தற்போது இத்திட்டம் மத்திய அரசால் 03.12.2014ல் அறிவிக்கப்பட்ட தீனதயாள் உபாத்யாய கிராம ஜோதி யோஜனா என்ற திட்டத்தின் ஊரக மின்மயமாக்கல் பகுதியின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது.

மூன்று மாவட்டங்களுக்கான இத்திட்டத்தின் இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டு தமிழக அரசின் வழியாக ஊரக மின்மயமாக்கல் கழகம், புதுடில்லிக்கு ஒப்புதலுக்காக 27.09.2018 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.